செய்தி வெளியீடு எண். 333 நாள் 19/09/2006

## செய்தி வெளியீடு
## 19.9.2006

தமிழ்நாட்டில் காலணிகள் சிறப்புப் பொருளாதார மண்டலம் மற்றும் காலணிகள் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றைப் புதியதாக அமைக்கும் திட்டம் தொடர்பாக, தமிழக அரசுக்கும் திருவாளர்கள் குரோத் லிங்க் என்ற நிறுவனத்திற்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் முன்னிலையில் இன்று (19.9.2006) கையெழுத்தானது.

குரோத் லிங்க் என்னும் நிறுவனம், திருவாளர்கள் ஃபெங்க் டே என்டர்பிரைசஸ் என்னும் தாய்வான் நாட்டைச் சேர்ந்த ஷு தயாரிப்பு முன்னணி நிறுவனத்தின் துணை நிறுவனம் ஆகும். ஃபெங்க் டே நிறுவனம், விளையாட்டு வீரர்களுக்கான ஷுக்கள், ஸ்கேட்டிங்க் ஷுக்கள், சாதாரண ஷுக்கள் போன்ற காலணிப் பொருள்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதோடு, புகழ்பெற்ற உலக பிராண்ட் ஷு வகைகளையும் தயாரித்து அளிக்கிறது. ஃபெங்க் டே நிறுவனம் சீனாவிலும், வியட்நாமிலும் நான்கு தொழிற்சாலைகளை நடத்தி வருகிறது. இது, தற்சமயம் அனைத்து வகைகளிலும் ஆண்டுக்கு 50 மில்லியன் ஜோடி காலணிகளைத் தயாரிக்கும் திறன் கொண்டுள்ளது. கடந்த 2005–ம் ஆண்டு மட்டும், ஃபெங்க் டே நிறுவனம் 770 மில்லியன் அமெரிக்க

டாலர் அளவுக்குமேல் விற்றுமுதல் செய்துள்ளதோடு, பல்வேறு இடங்களிலும் 60,214 பணியாளர்களைக்கொண்டு இயங்குகிறது.

குரோத் லிங்க் நிறுவனம், தமிழ்நாட்டில் செய்யாறில் உள்ள சிப்காட் தொழிற் பூங்காவில் 275 ஏக்கர் பரப்பளவில் காலணிகள் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அமைக்கவும், அம்மண்டலத்தில் காலணிகள் தயாரிப்புத் தொழிற்சாலையை அமைக்கவும் முன்வந்துள்ளது. இந்த சிறப்புப் பொருளாதார மண்டலம் ஏற்றுமதிச் சந்தையை பிரதானமாகக் கொண்டதாகும். இத்திட்டத்தினை குரோத் லிங்க் மற்றும் அதன் குரூப் நிறுவனங்கள் சேர்ந்து ரூ.300 கோடி நேரடி முதலீட்டில் நிறுவ உள்ளனர். இதன்மூலம் முதற்கட்டத்தில் 5000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்கவுள்ளனர். இறுதியாக, இத்திட்டத்தின் அனைத்து விரிவாக்கப் பணிகளும் நிறைவுற்ற நிலையில் சுமார் 15,000 பேர் இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் பணியமர்த்தப்படுவர்.

*****

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள் : 19.9.2006